**செய்தி வெளியீடு எண்: 320** **நாள்:18.06.2013**

# <u>செய்தி</u>

**<u>மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் செயலாட்சியர்கள் ஆய்வுக் கூட்டம்</u>**

- **அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் ஏழை, எளிய விவசாய மக்களுக்கு தங்குதடையின்றி பயிர்க்கடன் வழங்க உரிய நடவடிக்கை.**

- **கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நியாயவிலைக் கடைகளில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்குதல்.**

- **2013–2014 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகள் மீது முன்னேற்றம்.**

- **கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகள், கூட்டுறவு சங்கங்களை திறம்பட நடத்துதல் குறித்து பயிற்சி அளித்தல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்களின் தலைமையில் இன்று (18.6.2013) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் செயலாட்சியர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து பேசுகையில், "கூட்டுறவுத்துறையில் செயல்பட்டு வரும் 10,368க்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்களில் ரூ.1,20,889.60 கோடிக்கு மேல் வியாபாரம் செய்து ஒரு கோடியே 70 இலட்சத்து 68 ஆயிரத்து 812 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். இக்கடனுதவி நடப்பாண்டிலும் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகள் மீதான முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு அதில் நிலுவையுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து வருங்காலங்களில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். அப்போது, கூட்டுறவு சங்கங்களை எளிதில் அணுகி கடன் பெற இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பயிர்க்கடன் வழங்குவதற்குத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, ஏழை, எளிய நடுத்தர விவசாயிகளுக்கு குறுகிய காலப் பயிர்க் கடன் ரூ.4,500 கோடிக்கு மேல் தங்கு தடையின்றி வழங்குதல், அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு ரூ.900 கோடி அளவிற்கு பயிர் கடன் வழங்குதல், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சென்னையைத் தவிர இதர மாவட்டங்கள் அனைத்தும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டதையடுத்து குறுகிய காலப் பயிர்க்கடன்கள் மத்தியகாலப் பயிர்க்கடன்களாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல், ரூ.10,000 கோடி அளவிற்கு நகைக்கடன் வழங்குதல், விவசாயிகளுக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட விதைகள் ரூ.25.20 கோடி அளவிற்கு கிடைத்திடவும், விவசாயிகளுக்கு தடையின்றி உரங்கள் கிடைக்க ரூ.143.46 கோடி அளவிற்கு உரம் விற்பனை செய்திடவும், வேளாண் மருத்துவப் பயன்பாட்டு மையங்கள் மூலம் மண் பரிசோதனை, நீர்பரிசோதனை மேற்கொள்ளவும், பொது சேவை மையங்களின் மூலம் குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள் அளித்தல், 212 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் தரமான மருந்துகள் நியாயமான விலையில் ஏழை, எளிய மக்களுக்கு கிடைத்திடவும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.160 கோடி கடன், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.15 கோடி அளவிற்கு கடன், சிறு வியாபாரக் கடன் ரூ.100 கோடி வழங்குதல், தானிய

ஈட்டுக் கடன் ரூ.120 கோடி வழங்குதல், 4,529 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணப் பரிமாற்றம், மின்னணு வங்கியியல் (E-Banking) திட்டத்தைச் செயல்படுத்துதல் குறித்தும் ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார்.

விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும், அதன் வாயிலாக அவர்களின் தனிநபர் வருமானம் உயருவதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள் எனவும், விவசாய பெருமக்கள் தங்களது இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மேலும் ரூ.140.94 கோடி செலவில் 1,044 சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கிகள் சிறப்பாக செயல்பட்டு வரும் சூழ்நிலையில், வைப்புநிதி சேகரிப்பு இயக்கத்தை மிகச் சிறப்பாக நடத்தி கூட்டுறவு வங்கிகளின் சேவை அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர நடவடிக்கை மேற்கொள்ளவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் வைப்புதாரர்களுக்கு திரும்ப வழங்க வைப்புத் தொகை உத்தரவாத நிதி ரூ.66.53 கோடி உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பொதுவிநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட்டுறவு சங்கங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் பெரும் பங்காற்றி வருகின்றன. குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் பேரிலும், அவர்களின் தேவையின் அடிப்படையிலும் மட்டுமே பொருள்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும். குடும்ப அட்டைதாரர்கள் கேட்கும் பொருள்களை உடனுக்குடன் வழங்க வேண்டும் எனவும் அனைத்துப் பொருள்களும் ஒட்டு மொத்தமாக தான் வாங்க வேண்டும் எனக் கட்டாயப் படுத்தக்கூடாது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை வலியுறுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முன்னோடி திட்டமான உணவு பாதுகாப்பு அளித்திட விலையில்லா அரிசி திட்டத்தில் ஒரு கோடியே 97 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் அரசு ரூ.4,900 கோடி மானியமாக வழங்குகிறது. எந்தவித புகாருக்கும் இடமின்றி விலையில்லா அரிசித் திட்டத்தை சிறப்பாக நடத்த அறிவுறுத்தினார்.

அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளும் வெளிச் சந்தையில் 20 ரூபாய்க்கு ஒரு கிலோ தரமான அரிசி வழங்கும் திட்டத்தை எவ்வித குறைபாடுக்கும் இடமின்றி, செம்மையாக, சீரான முறையில் வழங்க வேண்டும். இதன்மூலம் அரசுக்கு நற்பெயரை கூட்டுறவு பண்டகசாலைகள் ஈட்டித் தர வேண்டும். மேலும் பண்டகசாலைகள் விலைக் கட்டுப்படுத்தும் நிதியைப் பயன்படுத்தி உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, மைதா, சமையல் எண்ணெய் போன்ற மக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களை வாங்கி வெளிச்சந்தையைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை நிறைவு செய்யும் வகையில் அவர்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தையும் சீரிய முறையில் செயல்படுத்தி அனைவரும் பயன் பெற முழு ஈடுபாட்டுடன் செயல்படுவதோடு, கூட்டுறவு சங்கங்களில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகள், கூட்டுறவு சங்கங்களை திறம்பட நடத்துதல் குறித்து பயிற்சி அளித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி கூட்டுறவுத்துறை அனைத்து செயல்பாட்டிலும் முதலிடம் வகிக்கத்தக்க வகையில் திட்டங்கள் வகுத்து திறம்பட செயலாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களிடம் வலியுறுத்தினார்.

மேலும், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி இந்திய அளவில் தலைமை கூட்டுறவு வங்கிகளில் சிறந்த கூட்டுறவு வங்கியாக தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற தேசிய கூட்டுறவு வங்கி இணையத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான விருதினை புதுடில்லியில் 25.6.2013 மற்றும் 26.6.2013ல் நடைபெறவுள்ள 16வது இந்திய கூட்டுறவு காங்கிரஸ் மாநாட்டில் பெறவுள்ளதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி வ.கலை அரசி, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.ம.ப.சிவன் அருள், திரு.இராம.ஜெயம் பாண்டியன், திரு.எம்.மோகன், திருமதி கா.பிரமிளா, திருமதி. வெ.நந்தகுமாரி மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**